**மே – 13**

# TNPSC துளிகள்

- 2024-2025 ஆண்டில் தமிழ்நாட்டில் சுமார் 56% பிரசவங்கள் அரசு மருத்துவமனைகளில் நடைபெற்றன என்ற நிலையில் இதில் சுமார் 83% பிரசவங்கள் ஒரு விரிவான அவசர மகப்பேறியல் மற்றும் பச்சிளம் குழந்தைப் பராமரிப்பு (CEmONC) மையங்களில் நடைபெற்றன.
    - தமிழ்நாடு 99.9% என்ற அளவில் (8.02 லட்சம்) மருத்துவமனைப் பிரசவங்களை மேற் கொள்கிறது என்பதோடு இந்த மாநிலத்தின் பேறுகாலத் தாய்மார்கள் உயிரிழப்பு விகிதம் என்பது 2024-25 காலக்கட்டத்தில் 1,00,000 பிறப்புகளுக்கு 39 ஆக உள்ளது
- பூடான் நாடானது, Binance Pay மற்றும் DK வங்கியுடன் இணைந்து உலகின் முதல் தேசிய அளவிலான இணையச் சங்கேதப் பணம் சார் சுற்றுலா கட்டண முறையை அறிமுகப் படுத்தியது.
- நியூயார்க் நகரில் நடைபெற்ற ஐக்கிய நாடுகள் சபையின் வனத்துறை மன்றத்தின் (UNFF20) 20வது அமர்வில், வனங்களின் வளங்காப்பு மற்றும் நிலையான வன மேலாண்மைக்கான அதன் தொடர்ச்சியான உறுதிப்பாட்டை இந்தியா எடுத்துரைத்து உள்ளது.

# தமிழ்நாட்டுச் செய்திகள்

## தமிழ்நாட்டில் 5வயதிற்குட்பட்டோர் உயிரிழப்பு விகிதம்





- 2022-2023 ஆம் ஆண்டில் 10.9 (1,000 பிறப்புகளுக்கு) ஆக இருந்த ஐந்து வயதிற்குட்பட்ட குழந்தைகளின் உயிரிழப்பு விகிதம் ஆனது, 2024-2025 ஆம் ஆண்டில் சுமார் 8.2 ஆகக் குறைந்துள்ளது.
- தமிழ்நாடு மாநில அரசானது அங்கன்வாடி மையங்களில் ஊட்டச்சத்து குறைபாடுள்ள குழந்தைகளை சுகாதாரக் குழுக்கள் மூலம் அடையாளம் காண்பதற்காக ‘ஊட்டச் சத்தை உறுதி செய்’ எனும் ஒரு சிறப்புத் திட்டத்தைக் கொண்டுள்ளது.
- மேலும், அந்தக் குழந்தைகளுக்கு கூடுதல் ஊட்டச்சத்து வழங்குவதற்காக வேண்டி

ஒருங்கிணைந்த குழந்தை மேம்பாட்டுச் சேவைத் திட்டங்களும் (ICDS) உள்ளது.

# தேசியச் செய்திகள்

## பிரம்மோஸ் எறிகணை உற்பத்தி பிரிவு

- லக்னோவில் உள்ள உத்தரப் பிரதேச மாநிலத்தின் பாதுகாப்புத் தொழில்துறை உற்பத்தி மண்டலத்தில் பிரம்மோஸ் எறிகணை உற்பத்திப் பிரிவானது அதிகாரப் பூர்வமாகத் திறக்கப் பட்டுள்ளது.
- இந்த மையத்தின் இலக்கானது, ஆண்டுதோறும் சுமார் 80 முதல் 100 எறிகணைகளை உற்பத்தி செய்வதாகும்.
- பிரம்மோஸ் எறிகணையானது, உலகின் வேகமான மீயொலி சீர்வேக எறிகணைகளில் ஒன்றாகும்.
- 290 முதல் 400 கிலோ மீட்டர் தூரம் வரையிலும், மேக் 2.8 என்ற அதிகபட்ச வேகத்திலும் இயங்கும் இந்த எறிகணையை நிலம், கடல் மற்றும் வான்வழியில் இருந்து ஏவ முடியும்.





## உற்பத்தி செலவின விதிமுறைகளை நிர்ணயித்தல், 2025

- இந்தியப் போட்டி ஆணையம் (CCI) ஆனது, உற்பத்திச் செலவை நிர்ணயிப்பதற்கான விதிமுறைகளை அறிவித்துள்ளது.
- இது விரைவு வழி வர்த்தகம் மற்றும் இணைய வழி வணிகத் துறைகளில் கூறப்படும் செலவினத்தினை விடக் குறைவான விலை நிர்ணயம் மற்றும் அதிகத் தள்ளுபடி நடைமுறைகளை திறம்பட மதிப்பிடுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ஒரு முன்னணி நிறுவனம் ஆனது அதன் போட்டி நிறுவனத்தினை அகற்றுவதற்காக உற்பத்திச் செலவினங்களுக்குக் கீழே விலைகளை நிர்ணயிக்கும் போது இத்தகைய செலவினத்தினை விடக் குறைவான விலை நிர்ணயம் நிர்ணயிக்கப்படுகிறது.
- போட்டி நிறுவனங்கள் வெளியேற்றப்பட்டவுடன், இந்த நிறுவனம் அதன் விலைகளை உயர்த்தலாம்.

- போட்டி தன்மைக்கு எதிரானதாகக் கருதப்படுகின்ற இந்த நடைமுறையானது, 2002 ஆம் ஆண்டு போட்டிச் சட்டத்தின் 4(2)(a)(ii) வது பிரிவின் கீழ் வெளிப்படையாகத் தடை செய்யப்பட்டுள்ளது.

| **CCI (Determination of Cost of Production) Regulations, 2009** | **CCI (Determination of Cost of Production) Regulations, 2025** |
|---|---|
| The regulation relied on market value, that was defined as consideration which the customer pays or agrees to pay for a product that is/can be sold or provided. | The regulation relies on average total cost, i.e., defined as total cost divided by total output during the referred period. |
| The determination of cost included cost concepts such as avoidable cost, long-run average incremental cost, market value. | The determination of cost proposed to include cost concepts such as average total cost, average avoidable cost, or long-run average incremental cost. |
| *The proposed draft is a shift from market value to average total cost as a factor for the determination of cost.* | |

## 2025 MMR, U5MR, NMR குறித்த சமீபத்தியத் தகவல்கள்



MATERNAL MORTALITY RATIO

| Year | India | K'taka | AP | Telangana | Kerala | TN |
|---|---|---|---|---|---|---|
| 2014-16 | 130 | 108 | 74 | 81 | 46 | 66 |
| 2015-17 | 122 | 97 | 74 | 76 | 42 | 63 |
| 2016-18 | 113 | 92 | 65 | 63 | 43 | 60 |
| 2017-19 | 103 | 83 | 58 | 56 | 30 | 58 |
| 2018-20 | 97 | 69 | 45 | 43 | 19 | 54 |
| 2019-21 | 93 | 63 | 46 | 45 | 20 | 49 |

WHO DEFINITION

As per World Health Organisation, maternal death is the death of a woman while pregnant or within 42 days of termination of pregnancy, irrespective of the duration and site of the pregnancy, from any cause related to or aggravated by the pregnancy or its management but not from accidental or incidental causes.

Karnataka has already met the United Nations Sustainable Development Goal (SDG) target of reducing MMR to 70 by 2030.

PANEL'S RECOMMENDATIONS

- After recent deaths of new mothers in Ballari, the health department's expert committee made recommendations to improve maternal care
- Administer correct dosages of IFA tablets, iron sucrose, and FCM injections to treat anemia
- Strengthen documentation in Thayi card, RCH portal, and other records
- Mandate hospital stays: 3 days after normal birth, 5-7 days after caesarean
- Avoid unnecessary caesarean sections
- Conduct monthly counselling/tracking of mothers until 8th month, increasing frequency as delivery approaches
- Finalise local transport arrangements well before delivery date


- இந்தியாவின் கேரளா, மகாராஷ்டிரா மற்றும் தமிழ்நாடு ஆகிய மூன்று மாநிலங்கள் MMR, U5MR, NMR ஆகியவற்றில் ஐக்கிய நாடுகள் சபையின் நிலையான மேம்பாட்டு இலக்குகளை (SDGs) அடைந்துள்ளன.
- பேறுகாலத் தாய்மார்கள் உயிரிழப்பு விகிதம் அல்லது MMR – என்பதின் இலக்கு 2030 ஆம் ஆண்டில் <=70; ஐந்து வயதிற்குட்பட்ட குழந்தைகளின் உயிரிழப்பு விகிதம் அல்லது U5MR – என்பதின் இலக்கு 2030 ஆம் ஆண்டில் <=25; மற்றும் பச்சிளம் குழந்தைகளின் உயிரிழப்பு விகிதம் அல்லது NMR – என்பதின் இலக்கு 2030 ஆம் ஆண்டில் <=12 ஆக உள்ளது.
- கேரளா (20), மகாராஷ்டிரா (38), தெலுங்கானா (45), ஆந்திரப் பிரதேசம் (46), தமிழ்நாடு (49), ஜார்க்கண்ட் (51), குஜராத் (53), மற்றும் கர்நாடகா (63) உள்ளிட்ட எட்டு மாநிலங்கள் ஏற்கனவே MMR SDG இலக்கை அடைந்துள்ளன.
- கேரளா (8), டெல்லி (14), தமிழ்நாடு (14), ஜம்மு & காஷ்மீர் (16), மகாராஷ்டிரா (16), மேற்கு

வங்காளம் (20), கர்நாடகா (21), பஞ்சாப் (22), தெலுங்கானா (22), இமாச்சலப் பிரதேசம் (23), ஆந்திரப் பிரதேசம் (24), மற்றும் குஜராத் (24) ஆகிய பன்னிரண்டு மாநிலங்கள் / ஒன்றியப் பிரதேசங்கள் ஏற்கனவே U5MR SDG இலக்கை அடைந்துள்ளன.

- கேரளா (4), டெல்லி (8), தமிழ்நாடு (9), மகாராஷ்டிரா (11), ஜம்மு & காஷ்மீர் (12), மற்றும் இமாச்சலப் பிரதேசம் (12) ஆகிய ஆறு இந்திய மாநிலங்கள்/ஒன்றியப் பிரதேசங்கள் ஏற்கனவே NMR SDG இலக்கை அடைந்துள்ளன.
- 2019-21 ஆம் ஆண்டில் 93 ஆக இருந்த MMR ஆனது 2014-16 ஆம் ஆண்டில் 37 புள்ளிகள் குறைந்து ஒரு லட்சம் நேரடிப் பிறப்புகளுக்கு 130 என்ற அளவாகப் பதிவானதுடன் இந்தியாவின் MMR பதிவில் குறிப்பிடத்தக்கச் சரிவு பதிவாகியுள்ளது.
- 2014 ஆம் ஆண்டில் 1,000 பிறப்புகளுக்கு சுமார் 39 ஆக இருந்த இந்தியாவின் பச்சிளம் குழந்தை உயிரிழப்பு விகிதம் (IMR) ஆனது, 2021 ஆம் ஆண்டில் 1,000 பிறப்புகளுக்கு 27 ஆகக் குறைந்தது.
- 2014 ஆம் ஆண்டில் 1,000 பிறப்புகளுக்கு 26 ஆக இருந்த NMR ஆனது, 2021 ஆம் ஆண்டில் 1,000 பிறப்புகளுக்கு 19 ஆகக் குறைந்தது.
- 2014 ஆம் ஆண்டில் 1,000 பிறப்புகளுக்கு 45 ஆக இருந்த U5MR ஆனது 2021 ஆம் ஆண்டில் 1,000 பிறப்புகளுக்கு 31 ஆகக் குறைந்தது.
- 2014 ஆம் ஆண்டில் 899 ஆக இருந்த பிறப்பின் போது பதிவான பாலின விகிதம் ஆனது 2021 ஆம் ஆண்டில் 913 ஆக உயர்ந்தது.
- மொத்தக் கருவுறுதல் விகிதமானது 2021 ஆம் ஆண்டில் 2.0 ஆக நிலையாக உள்ளது.
- இது 2014 ஆம் ஆண்டில் 2.3 ஆக இருந்த விகிதத்திலிருந்து பதிவாகிய குறிப்பிடத்தக்க ஒரு முன்னேற்றமாகும்.

# சர்வதேசச் செய்திகள்

## ஷூமன் பிரகடனத்தின் 75வது ஆண்டு நிறைவு




- ஐரோப்பிய ஒன்றியமானது, ஷூமன் பிரகடனத்தின் 75வது ஆண்டுவிழா நிறைவைக் கொண்டாடியது.
- இது ஐரோப்பிய ஒருங்கிணைப்பிற்கும், அதாவது ஐரோப்பிய ஒன்றியத்திற்கு அடித் தளமிட்ட ஒரு நிறுவன ஆவணமாகும்.

- 1950 ஆம் ஆண்டு மே 09 ஆம் தேதியன்று, அப்போதைய பிரெஞ்சு நாட்டின் வெளியுறவு அமைச்சர் இராபர்ட் ஷூமன் ஐரோப்பிய நிலக்கரி மற்றும் எஃகு சமூக அமைப்பினை நிறுவுவதற்கான முன்மொழிதலை முன் வைத்தார்.
- இது ஐரோப்பிய ஒன்றியத்தினை உருவாக்குவதற்கான முதலாவது அதிகாரப்பூர்வப் படிநிலையாக பரவலாகக் கருதப்படுகிறது.

# பொருளாதாரச் செய்திகள்

## இந்திய ரிசர்வ் வங்கியின் புதிய எண்ணிமக் கடன் விதிமுறைகள் 2025

- ஒழுங்குமுறைப்படுத்தப்பட்ட நிறுவனங்கள் (REs) மேற்கொள்ளும் எண்ணிமக் கடன் நடவடிக்கைகளுக்கான ஒழுங்குமுறைக் கட்டமைப்பை நன்கு நெறிப்படுத்துவதையும் அதனை ஒருங்கிணைப்பதையும் இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்தப் புதிய விதிகள் ஆனது, ஒழுங்குபடுத்தப்பட்ட நிறுவனங்கள் தங்கள் எண்ணிமக் கடன் விண்ணப்பங்களை மையப்படுத்தப்பட்ட தகவல் மேலாண்மை அமைப்பு (CIMS) இணைய தளம் மூலம் தெரிவிக்க வேண்டும்.
- இந்த முக்கிய முன்னெடுப்பு ஆனது, கடன் வாங்குபவர்களிடையே ஒரு நம்பிக்கையை ஊக்குவிப்பதற்காகவும், எண்ணிமக் கடன் வழங்குவதில் பரவி இருக்கும் நெறிமுறை அற்ற நடைமுறைகளைக் குறைப்பதற்காக அமைக்கப்பட்டுள்ளது.





# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## ஆசிய அரிசியின் முதல் விரிவான மரபணு தரவு

- சுமார் 144 காடுகளில் வளரக் கூடிய மற்றும் பயிரிடப்பட்ட அரிசி வகைகளின் மரபணு தரவுகளை உள்ளடக்கிய முதல் ஆசிய அரிசி வகைகளின் முதல் விரிவான மரபணு தரவினை (ஒட்டு மொத்த மரபணுப் பெருக்கத்தின் ஒரு விரிவான தரவுகள்) சீன நாட்டு அறிவியலாளர்கள் உருவாக்கியுள்ளனர்.
- அரிசி வகைகளின் இந்த தரவு ஆனது, ஆராய்ச்சியாளர்கள் புதிய பயிரின வகைகளை உருவாக்குவதற்கும், நோய்க்கு எதிரான தாங்குத்தன்மை மற்றும் பருவநிலை குறித்த தாக்குதல்களுக்கு எதிரான மீள்தன்மைக்கான பல்வேறு புதிய பண்புகளை அறிமுகப்

படுத்துவதற்கும் அனுமதிக்கிறது.

- ஆசிய பயிரிடப்பட்ட அரிசி (ஒரைசா சட்டைவா L.) ஆனது O.ருஃபிபோகன் எனும் ஒரு காட்டில் வளரக் கூடிய அதன் முன்னோடி இனத்திலிருந்து பெறப்பட்டது.
- ஒரைசா-IIIa என்பது O.ருஃபிபோகன் இனத்தின் ஒரு மாறுபாடு ஆகும்.




## காமிகேஸ் ஆளில்லா விமானம்




- பாகிஸ்தானின் இராணுவமானது, இந்தியாவிற்கு எதிராக துருக்கி நாட்டின் பைக்கர் YIHA III காமிகேஸ் ஆளில்லா விமானங்களைப் பயன்படுத்தியது.
- காமிகேஸ் ஆளில்லா விமானங்கள் என்பவை ஒரு இலக்கை நோக்கிச் சென்று, அதன் பின்னர் அவற்றை அடையாளம் கண்டவுடன் ஒரு வெடிக்கும் கணையாக மாறி அவற்றின் மீது மோதுவதன் மூலம் இலக்குகளைத் தாக்குகின்றன.
- தொலைவிலிருந்து இயக்கக் கூடிய வகையிலான ஒற்றைப் பயன்பாட்டுத் தாக்குதல் ஆயுதங்கள் ஆனது 'தற்கொலைத் தாக்குதல்களில் ஈடுபடும் ஆளில்லா விமானங்கள்'

என்றும் அழைக்கப்படுகின்றது.


# சுற்றுச்சூழல் செய்திகள்

## மெக்ஸிகோவில் புதிய முதலை இனங்கள்

- கோசுமெல் தீவு மற்றும் பான்கோ சின்சோரோவின் பவளப்பாறைத் தீவு ஆகியவற்றில் (அட்டோலிலும்) முறையே இதுவரை கண்டறியப்படாத இரண்டு முதலை இனங்களை அறிவியலாளர்கள் கண்டறிந்துள்ளனர்.
- புதிதாக அடையாளம் காணப்பட்ட இந்த இனங்கள் ஒவ்வொன்றும் சுமார் 1,000க்கும் குறைவான இனப்பெருக்க எண்ணிக்கையினைக் கொண்டுள்ளன.
- இது மேற்கத்திய நாடுகளில் (New World) உள்ள முதலை இனங்களின் எண்ணிக்கையை 4லிருந்து 6 ஆக உயர்த்துகிறது.
- அமெரிக்கன், மோர்லெட்ஸ், கியூபன் மற்றும் ஒரினோகோ ஆகிய முதலை இனங்கள் இதற்கு முன்னர் அறியப் பட்ட முதலை இனங்கள் ஆகும்.




## IEA முகமையின் உலகளாவிய மீத்தேன் கண்காணிப்பு அறிக்கை 2025





- சர்வதேச எரிசக்தி முகமையானது (IEA), 2025 ஆம் ஆண்டு உலகளாவிய மீத்தேன் கண்காணிப்பு அறிக்கையினை வெளியிட்டுள்ளது.
- 2024 ஆம் ஆண்டில் எரிசக்தித் துறையானது சுமார் 145 மில்லியன் டன் (Mt) மீத்தேன்

உமிழ்விற்குப் பங்காற்றியுள்ளது.

- மீத்தேன் உமிழ்விற்கான மூன்று முக்கிய ஆதாரங்களில் வேளாண்மை, எரிசக்தி மற்றும் கழிவுத் துறைகள் ஆகியன அடங்கும்.
- மனித நடவடிக்கைகளிலிருந்து வெளியாகும் மீத்தேன் உமிழ்வில் 35 சதவீதத்திற்கும் அதிகமானவை எரிசக்தித் துறையிலிருந்து வெளியாகுபவையாகும்.
- சுமார் 18 மெட்ரிக் டன் மீத்தேன் உமிழ்வானது, பெரும்பாலும் உயிரி எரிபொருளின் பாரம்பரியப் பயன்பாட்டிலிருந்து அதாவது உயிரி ஆற்றலின் ஒரு முழுமையற்ற எரிப்பிலிருந்து உருவாகுபவையாகும்.
- அல்ஜீரியா, சீனா, இந்தியா, ஈரான், ரஷ்யா, சிரியா, தாய்லாந்து மற்றும் வெனிசுலா போன்ற நாடுகளானது, உலகளாவிய எரிசக்தி சார்ந்த மீத்தேன் உமிழ்வில் சுமார் 45 சதவீதப் பங்கினைக் கொண்டுள்ளன.
- உமிழ்வுக் குறைப்பு இலக்குகளை அடைவதற்கு என்று எண்ணெய் மற்றும் எரிவாயுத் துறைக்கு 175 பில்லியன் டாலரும் மற்றும் நிலக்கரித் துறைக்கு 85 பில்லியன் டாலர் முதலீடும் தேவைப்படுகிறது.

# அறிக்கைகள் மற்றும் குறியீடுகள்

## தெற்காசியப் பத்திரிகை சுதந்திர அறிக்கை 2024–25





- 'Frontline Democracy: Media and Political Churn' என்ற தலைப்பிலான ஒரு அறிக்கையானது ஆசியப் பத்திரிகை சுதந்திரக் குழுவினால் வெளியிடப்பட்டுள்ளது.
- இந்தியா, பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான், இலங்கை, வங்காளதேசம், நேபாளம், பூடான் மற்றும் மாலத்தீவுகளில் நிலவும் பத்திரிகைச் சுதந்திரத்தின் நிலையை இந்த அறிக்கை மதிப்பாய்வு செய்கிறது.
- இந்தக் காலக்கட்டத்தில் 250க்கும் மேற்பட்ட ஊடக உரிமை மீறல்கள் பதிவு செய்யப் பட்டுள்ளன; 69 பத்திரிகையாளர்கள் சிறையில் அடைக்கப்பட்டனர்/தடுப்புக் காவலில் வைக்கப்பட்டனர் என்பதோடு 20 பேர் பணியின் போது கொல்லப் பட்டனர்.
- பாகிஸ்தான் கடந்த 20 ஆண்டுகளில் பத்திரிகையாளர்கள் மீது அதிகளவில் வன்முறை

தாக்குதல் மேற்கொள்ளப்பட்ட ஆண்டை எதிர்கொண்டது.

# முக்கிய தினங்கள்

## உலக தலாசீமியா தினம் 2025 - மே 08

- தலாசீமியா பாதிப்பினை ஹீமோகுளோபின் உற்பத்திக் குறைவு அல்லது இல்லாமை நிலையாக வகைப்படுத்தப் படும் சில மரபுவழி இரத்தக் கோளாறுகளின் ஒரு குழுவாக விவரிக்கலாம்.
- தலாசீமியா ஏற்படுவதற்கான காரணங்களில் ஒன்று ஹீமோகுளோபின் உற்பத்தியை பாதிக்கும் மரபணு மாற்றங்கள் ஆகும்.
- இதில் பாதிக்கப்பட்ட ஹீமோகுளோபின் சங்கிலியின் அடிப்படையில் இதனை ஆல்பா மற்றும் பீட்டா தலாசீமியா என வகைப்படுத்தலாம்.
- பீட்டா - தலாசீமியா மேஜர் என்பது குழந்தைப் பருவத்தில் வெளிப்படுகின்ற, இரத்த சோகையுடன் கூடிய ஒரு பாதிப்பு வடிவமாகும் இதனால் இதற்கு வாழ்நாள் முழுவதும் இரத்தமாற்று சிகிச்சை தேவைப்படுகிறது.
- இந்த ஆண்டிற்கான இந்தத் தினத்தின் கருத்துரு என்பது, "Together for Thalassaemia: Uniting Communities, Prioritising Patients" ஆகும்.




## உலக வலசை போகும் பறவைகள் தினம் 2025 - மே 10





- இது மே மாதத்தின் இரண்டாவது சனிக்கிழமை மற்றும் அக்டோபர் மாதத்தின் இரண்டாவது சனிக்கிழமைகளில் கொண்டாடப்படுகிறது.
- இது வலசை போகும் பறவைகள் மற்றும் அவற்றின் வாழ்விடங்களைப் பாதுகாப்பதன்

அவசியத்தை எடுத்துக்காட்டும் வருடாந்திர விழிப்புணர்வு நிகழ்வாகும்.

- உலகளவில், அனைத்துப் பறவை இனங்களிலும் 49% இனங்கள் அழிந்து வருகின்றன, மேலும் 8 இனங்களில் 1 இனம் அழிந்து போகும் அபாயத்தில் உள்ளது.
- "Shared Spaces: Creating Bird-Friendly Cities and Communities" என்பது 2025 ஆம் ஆண்டிற்கான இந்தத் தினத்தின் கருத்துருவாகும்.

## தேசிய தொழில்நுட்பத் தினம் 2025 - மே 11

- இது அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையில் இந்தியாவின் சில குறிப்பிடத்தக்க முன்னேற்றங்களைக் கௌரவிப்பதோடு, புத்தாக்கம் மற்றும் தற்சார்பின் ஆற்றலை நாட்டிற்கு நினைவூட்டுகிறது.
- இந்தத் தினமானது 1998 ஆம் ஆண்டு மே 11 ஆம் தேதியன்று நடத்தப்பட்ட 'ஆபரேஷன் சக்தி' என்றும் அழைக்கப்படும் போக்ரான் II அணுசக்தி சோதனைகளின் வெற்றியை நினைவு கூருகிறது.
- ஹன்சா-3 எனப்படும் தேசிய விண்வெளி ஆய்வகத்தால் உள்நாட்டிலேயே உருவாக்கப் பட்ட இந்தியாவின் முதல் விமானத்தின் வெற்றிகரமான சோதனையும் அதே நாளில் தான் நடைபெற்றது.





# இதரச் செய்திகள்

## இமயமலை தூய்மையாக்கம் குறித்த அறிக்கை 2024

- இந்த அறிக்கையானது 2018 ஆம் ஆண்டிலிருந்து, ஜம்மு-காஷ்மீர் முதல் அருணாச்சலப் பிரதேசம் வரையில் நடத்தப்பட்ட மிக விரிவான நெகிழிக் கழிவுகள் மற்றும் தயாரிப்பு நிறுவனங்களின் பொருட்கள் வாரியான கழிவுகளின் தணிக்கைகளை ஒரு முக்கிய அடிப்படையாகக் கொண்டது.
- 2024 ஆம் ஆண்டில், நேபாளம் மற்றும் பூடான் ஆகியவை இந்த ஒரு முன்னெடுப்பில் இணைந்தன.
- இந்தப் பகுதியில் உள்ள நெகிழிக் கழிவுகளில் 80 சதவீதமானது ஒற்றைப் பயன்பாட்டு உணவு மற்றும் பான பெட்டிகள் காரணமாக உருவாகும் கழிவாகும்.
- இந்தக் கழிவுகளில் 70 சதவீதமானது மறு சுழற்சி செய்ய முடியாத அல்லது மாற்றுச்

சந்தை மதிப்பு இல்லாத நெகிழிப் பொருட்களை உள்ளடக்கியதாகும்.

- மொத்தக் கழிவுகளில் சுமார் 18.5 சதவீதம் மட்டுமே பாலி எத்திலீன் டெரெப்தாலேட் (PET) போன்ற மறு சுழற்சி செய்யக் கூடிய நெகிழிகளால் ஆனது.
- 86 தளங்களில் இருந்து 53,814 கழிவுகள் சேகரிக்கப்பட்டுள்ளதுடன் தூய்மையாக்கத்தில் சிக்கிம் முன்னோடி மாநிலமாக உருவெடுத்துள்ளது.
- மொத்த நெகிழிக் கழிவுகளில் பல் அடுக்கு நெகிழிகள் (MLP) 68.5 சதவீதப் பங்கினைக் கொண்டுள்ளது.
- அதே நேரத்தில் PET சுமார் 18.5 சதவீதமாகவும், LDPE சுமார் 5.4 சதவீதமாகவும், HDPE ஒரு சதவீதமாகவும் இருந்தது.




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★